(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 2(11).]**

# பாராளுமன்றத்தின் 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

**2025 செப்தெம்பர் 26, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2025 ஒக்தோபர் 07, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 117 - நிகழ்ச்சித்திட்டம் 02 — † 2025 சனவரி மாதம் 01 ஆம் திகதியில் தொடங்குகின்ற மற்றும் 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டிய நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணத்திலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெற்றுக்கொண்ட ஏதேனும் கடன் தொகையில் இருந்து, முப்பத்தாறு பில்லியன் அறுநூற்று ஒன்பது மில்லியன் ரூபாய்க்கு (ரூபா. 36,609,000,000) விஞ்சாத மேலதிக தொகையை செலுத்த வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| **தலைப்பு** | 117 - | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் | | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | 02 - | அபிவிருத்தி நடவடிக்கைகள் | | |
| | | மூலதனச் செலவினம் | ரூ. | 36,609,000,000 |
| | | **மொத்தச் செலவினம்** | **ரூ.** | **36,609,000,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2025 செப்தெம்பர் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டைப் பார்க்க.

1 மற்றும் 2 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 14,785,600,000 ஆகும்.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2025 ஒக்தோபர் 09, வியாழக்கிழமை)

543/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய ஒவ்வோர் ஆலோசகரின் பெயர், நியமிக்கப்பட்ட திகதி, கல்வித் தகைமைகள், செலுத்தப்படுகின்ற மாதாந்தச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், முந்தைய சேவை நிலையங்கள் மற்றும் வகித்துள்ள பதவிகள், குறித்த நபருக்கு வாகனம் வழங்கப்பட்டிருப்பின் வாகன இலக்கம், வாகனத்தின் வகை, வாகனத்திற்காக வழங்கப்படுகின்ற மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு, குறித்த நபருக்கு அலுவலகமொன்று வழங்கப்பட்டிருப்பின் அந்த அலுவலகம் அமைந்துள்ள இடம் மற்றும் அந்த அலுவலகத்திற்காகச் செலுத்தப்படுகின்ற மாதாந்த வாடகை ஒவ்வோர் அமைச்சு வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

545/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி தயாசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிரதி அமைச்சர் ஒருவரின் தனிப்பட்ட பணியாட்டொகுதிக்காக அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப் பிரதி அமைச்சர்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட பணியாட்டொகுதிக்கும் நியமனம் செய்யப்பட்ட ஒவ்வொரு அலுவலரினதும் பெயர், முகவரி, நியமனம் செய்யப்பட்டத் திகதி, செலுத்தப்படும் மாதாந்தச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், அச்சம்பளம் தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கு வைப்பிடப் படாவிடின், அவை வைப்பிடப்படும் வங்கி, செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகள், அவ்வலுவலர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டிருப்பின், அவ் வாகனத்தின் இலக்கம், வாகனத்தின் வகை மற்றும் அவ்வாகனத்திற்காக மாதாந்தம் செலுத்தப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் என்பன ஒவ்வொரு அமைச்சு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

546/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி தயாசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர் ஒருவரின் தனிப்பட்ட பணியாட்டொகுதிக்காக அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அமைச்சர்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட பணியாட்டொகுதிக்கும் நியமனம் செய்யப்பட்ட ஒவ்வொரு அலுவலரினதும் பெயர், முகவரி, நியமனம் செய்யப்பட்டத் திகதி, செலுத்தப்படும் மாதாந்தச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், அச்சம்பளம் தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கு வைப்பிடப் படாவிடின், அவை வைப்பிடப்படும் வங்கி, செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகள், அவ்வலுவலர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டிருப்பின், அவ் வாகனத்தின் இலக்கம், வாகனத்தின் வகை மற்றும் அவ்வாகனத்திற்காக மாதாந்தம் செலுத்தப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் என்பன ஒவ்வொரு அமைச்சு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 ஒக்தோபர் 10, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## 2025 ஒக்தோபர் 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

725/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றளவில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ள பீடங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, பீடம் வாரியாக தனித்தனியே யாது என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி பல்கலைக்கழகத்தில் பகிடிவதை மிகத் தீவிரமாக இடம்பெற்று வருவதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நிலையை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

825/2025

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார அமைச்சு மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்களால் கொள்வனவு செய்யப்படும் மருந்துகளுக்கு ஆண்டொன்றுக்குச் செலவிடப்படும் மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி தொகையானது, அமைச்சிற்கும் அதனோடிணைந்த ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) வருடாந்த மருந்துத் தேவைப்பாட்டில் உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படும் மருந்துகளின் அளவு, வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்படும் மருந்துகளின் அளவு மற்றும் அவற்றுக்குச் செலவிடப்படும் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மருந்துப் பொருட்களுக்கான அனுப்பல் கட்டளைகளை முன்வைக்கும் காலப்பகுதிகளைத் தீர்மானிக்கும் நடைமுறை யாதென்பதையும்;

(v) அனுப்பல் கட்டளையிடப்பட்ட ஏதேனும் மருந்துப் பொருட்களை விநியோகிப்பதில் தாமதம் ஏற்படுமாயின், அதற்குப் பொறுப்புக்கு கூற வேண்டிய உத்தியோகத்தர் யாரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

859/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில், குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அரசாங்க காணிகளின் எண்ணிக்கை பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) ஹொரொவ்பொத்தான பிரதேச செயலாளர் பிரிவின், 153 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவின் கொடின்னேவ கிராமத்தில் அமைந்துள்ள சுமார் 100 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணி அனுமதியின்றி துப்புரவு செய்யப்பட்டு அதில் பயிரிடப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த காணியை துப்புரவு செய்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் யாவர் என்பதையும்;

(iv) மேற்படி நபர்களுக்கு அதற்காக சட்டப்பூர்வ உரிமை உள்ளதா என்பதையும்;

(v) இவர்கள் உர மானியத்தை பெற்றுக்கொண்டுள்ளார்களா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி உர மானியத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

879/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு அளிப்பு உறுதி (Deed of Grant) அல்லது காணி அனுமதிப்பத்திரம் (Land permit) வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்றுவரை அளிப்பு உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

901/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மின்சார சபையின் பிராந்திய அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் போதுமானளவு ஊழியர்கள் உள்ளனரா;

(iii) அவ்வலுவலகங்களுக்குத் தேவைப்படும் பொறியியலாளர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி எண்ணிக்கையிலான பொறியியலாளர்கள் உள்ளனரா;

(v) இன்றேல், பொறியியலாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(vi) புதிய பொறியியலாளர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்களா;

(vii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் மின்சாரம் உற்பத்திச் செய்யப்படும் மூலங்கள் யாவை;

(ii) இன்றளவில் மேற்படி ஒவ்வொரு மூலத்திலிருந்தும் உற்பத்திச் செய்யப்படும் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) இலங்கை மின்சார சபை தனியார்மயப்படுத்தப்படுமா;

(iv) ஆமெனில், அதன் ஊழியர்கள் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சபையின் கீழுள்ள கம்பெனிகளில் இன்றளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மூலோபாய நிகழ்ச்சித் திட்டங்கள் / கருத்திட்டங்கள் யாவை;

(ii) இன்றளவில் மேற்படி ஒவ்வொரு கம்பெனியிலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி கம்பெனிகளில் ஊழியர் மிகை காணப்படுகின்றதா;

(iv) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு கம்பெனியிலும் காணப்படும் ஊழியர் மிகை வெவ்வேறாக யாது;

(v) இலங்கை மின்சாரக் கம்பெனியால் எப்பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது;

என்பதையும் அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

958/2025

கௌரவ அஜித் கிஹான்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின், பல்லகந்தல் தேவாலயத்தில் மத வழிபாடுகளை மேற்கொள்வதற்கு வன சீவராசிகள் திணைக்களம் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இடையூறு செய்வதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

995/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதையும்;

(ii) அதற்கென விவசாயிகள் மிக அதிகமான உழைப்பினையும், பணத்தையும் ஈடுபடுத்த வேண்டியுள்ளது என்பதையும்;

(iii) ஆயினும், உழைப்பினையும், செலவினையும் ஈடுசெய்யக்கூடிய நியாயமான விலை விவசாய உற்பத்திகளுக்கு கிடைக்காமையின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iv) விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்யும் போது, நுகர்வோரும் அதிக விலையை செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது என்பதையும்;

(v) விவசாயிக்கும் நுகர்வோருக்கும் இடைநடுவே உள்ள மொத்த வியாபாரியும், சில்லறை வியாபாரியும் அதிக இலாபத்தை ஈட்டுகின்றனர் என்பதையும்;

(vi) விவசாயிகள் மற்றும் நுகர்வோர் ஆகிய இருதரப்பினரையும் பாதிக்கின்ற மேற்படி வழிமுறையை மாற்றியமைக்க வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், விவசாயி, வியாபாரி மற்றும் நுகர்வோர் ஆகிய மூவரையும் பாதுகாக்கும் வகையிலான வேலைத்திட்டமொன்று இதற்கென தயார் செய்யப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1313/2025

கௌரவ நிஷாந்த பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்பிட்டிய கல்வி வலயத்தில் அமைந்துள்ள அரச சார்பற்ற பாடசாலைகள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ள வருடம் மற்றும் நிர்வாக சபை அங்கத்தவர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் அரச நிறுவனங்கள் யாவை;

(iv) மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சுக்கு அல்லது மாகாண கல்வி அமைச்சுக்கு மேற்படி பாடசாலைகள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா;

(v) மேற்படி பாடசாலைகளினால் வழங்கப்படும் கல்வியின் தரம் மற்றும் இப்பாடசாலை மாணவர்களது உரிமைகளை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1326/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது சிறைச்சாலை யாதென்பதையும்;

(ii) மேற்படி சிறைச்சாலை ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அங்கு தடுத்து வைக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கையில் காணப்படும் சிறைச்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அச்சிறைச்சாலைகள் யாவையென்பதையும்;

(v) இன்றளவில் அவ்வொவ்வொரு சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கையானது, ஆண், பெண் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(vi) சிறைச்சாலையொன்றில் கைதி ஒருவருக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடப்பரப்பு சதுர அடி அளவில் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள மிகப் பெரிய சிறைச்சாலை யாதென்பதையும்;

(ii) அங்கு தடுத்து வைக்க இயலுமான ஆகக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மேற்படி சிறைச்சாலையில் நாளொன்றில் தடுத்து வைக்கப்பட்ட கைதிகளின் சராசரி எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1343/2025

கௌரவ லால் பிரேமநாத்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல பிரதேச செயலகப் பிரிவில், காலி – மாதம்பை பிரதான வீதியில், இரத்தினபுரி பக்கம் திரும்பும் தெனியாய 51வது சந்தியில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான காணியொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி காணியின் தற்போதைய நிலைமையும் எத்தேவைகளுக்காக அக்காணி பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(iii) இதற்கு முன்னர் மேற்படி காணியில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்று அமைக்கப்பட்டிருந்ததுடன், தற்போது இது மூடப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iv) இதனை மூடுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி காணியில் புதியதொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்தை துரிதகதியில் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஒக்தோபர் 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

678/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வரி செலுத்தும் மக்களுக்கும், பொதுத் திறைசேரிக்கும், அரச வங்கிகளுக்கும் பாரிய செலவினச் சுமையாக மாறியுள்ள இலங்கை மின்சார சபை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வாரா;

(ii) ஆமெனில், மேற்படி சபை மறுசீரமைக்கப்படும் முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

738/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த நாட்களில் கொழும்பு, பேர வாவியில் மீன்கள் இறந்த சம்பவம் தொடர்பாக அறிவாரா என்பதையும்;

(ii) அது தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் யாவை என்பதையும்;

(iii) பேர வாவி மாத்திரமன்றி, இலங்கையிலுள்ள பல நீர்த்தேக்கங்களிலுள்ள நீர் பாரியளவில் மாசடைந்துள்ளமையால் அந்நிலைமையைக் கட்டுப்படுத்த மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

808/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடாக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை படுகொலை, கடத்தல் மற்றும் தாக்குதலுக்கு இலக்கான ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஊடகவியலாளர்களுக்கு நீதியை நிலைநாட்டும் பொருட்டு நடத்தப்படுகின்ற விசாரணைகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

850/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் சுகாதாரத் துறைக்கு குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் பாரியளவில் சேவையாற்றுகின்றமையை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இன்றளவில் குடும்ப சுகாதார உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1009/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கும்பல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நிதி இழப்பீடு, மருத்துவ உதவி அல்லது புனர்வாழ்வுத் திட்டங்கள் போன்ற ஏதேனும் குறிப்பிட்ட உதவிகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளதா அல்லது அறிமுகப்படுத்த எண்ணியுள்ளதா என்பதையும்;

(ii) கும்பல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற மாவட்டங்கள் அல்லது மாகாணங்களில் இதுபோன்ற எந்தவொரு ஒத்துழைப்புத் திட்டங்களினதும் தற்போதைய நடைமுறைப்படுத்தலினதும் நிலை என்ன என்பதையும்;

(iii) இத்தகைய பாதிக்கப்பட்டவர்களுக்குச் சரியான நேரத்தில் ஒத்துழைப்பு மற்றும் நீண்டகால உதவி கிடைப்பதை உறுதி செய்வதற்காக மாகாண சபைகள் அல்லது மாவட்டச் செயலகங்களுக்கு ஏதேனும் சுற்றறிக்கைகள், வழிகாட்டுதல்கள் அல்லது கொள்கைச் சட்டகங்கள் வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1160/2025

கௌரவ (பேராசிரியர்) எல். எம். அபேவிக்ரம,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) செம்பனை (முள்ளுத் தேங்காய்) பயிர்ச்செய்கை மற்றும் செம்பனை விதை இறக்குமதி ஆகியன தற்பொழுது சட்டத்தினால் தடை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கைக்கு செம்பனை எண்ணெய் இறக்குமதி செய்வதற்காக வருடமொன்றுக்கு செலவு செய்யப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) செம்பனைப் பயிர்ச்செய்கையை மீள ஆரம்பிப்பதில் நிலவும் தடைகள் யாவை என்பதையும்;

(iv) செம்பனைப் பயிர்ச்செய்கை மற்றும் பாம் எண்ணெய் உற்பத்தி தொடர்பிலான அரசாங்கத்தின் கொள்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1174/2025

கௌரவ சுனில் ரத்னசிரி,— பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) இன்றளவில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவி வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், ஒவ்வொரு பதவி வாரியாக மேற்படி வெற்றிடங்களை நிரப்பும் திகதி வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2024 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு மே மாதம் வரை கைது செய்யப்பட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் செயற்படும் குற்றவாளிகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இன்றளவில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் நிகழும் முறைகேடுகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அம்முறைகேடுகளை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1211/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்திலுள்ள வயற்காணிகளின் மொத்த அளவு யாதென்பதையும்;

(ii) 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளின் சிறுபோகத்தின் போது அம்பாறை மாவட்டத்தின் மொத்த நெல் அறுவடையின் அளவு மற்றும் அவ்வறுவடையில் நெல் சந்தைப்படுத்தல் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அம்பாறை மாவட்டத்தில் உள்ள நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வொவ்வொரு களஞ்சியசாலையினதும் முகவரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நெல் களஞ்சியசாலைகளுள், நெல் உலர்த்தும் இயந்திரம் பொறுத்தப்பட்டுள்ள களஞ்சியசாலைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1283/2025

கௌரவ தனுஷ்க ரங்கனாத்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள்அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரு இலட்சம் கிலோமீட்டர் மாற்று வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கும் களுத்துறை மாவட்டத்திலுள்ள வீதிகள் யாவையென்பதையும்;

(ii) அவற்றுள் இன்றளவில் அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள மற்றும் நிறைவு செய்யப்படாத வீதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) அத்தகைய வீதி ஒவ்வொன்றுக்குமென செலவிடப்பட்டுள்ள மொத்த செலவுத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அத்தகைய வீதி ஒவ்வொன்றினது அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்படாத வீதிகளின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அத்தகைய வீதிகள் தொடர்பாக எடுக்கவிருக்கும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அத்தகைய வீதிகளின் பராமரிப்பு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப் படுகின்றனவா என்பதையும்;

(v) மேற்படி வேலைத்திட்டத்திற்காக வேறு நிறுவனங்களுக்கு கையகப்படுத்தப்பட்ட வீதிகள் மீண்டும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1319/2025

கௌரவ சானக மாதுகொட,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி கருத்திட்டம் (Inclusive Connectivity & Development Project) ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி கருத்திட்டத்தின் கீழ் காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வீதியின் நீளம் யாதென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு வீதியினதும் பெயர் மற்றும் செலவிடப்பட்ட தொகை மாவட்ட வாரியாக யாதென்பதையும்;

(iv) அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், அப்பணிகள் நிறைவு பெறாமலுள்ள வீதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படிக் கருத்திட்டம் காலி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி கருத்திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வீதிகளின் நீளம் மற்றும் அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) காலி மாவட்டத்திற்கு ஏற்புடையதாக மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) மேற்படிக் கருத்திட்டத்தை காலி மாவட்டத்தில் ஆரம்பிக்க நீண்ட காலம் எடுத்தமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஒக்தோபர் 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1084/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான வவுனியாவின், தச்சங்குளம் விமானநிலையத்தின் விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்காக அதனைச் சுற்றியுள்ள தனியார் காணிகள் சுவீகரிக்கப்பட்டதுடன் நீண்ட காலமாக பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட வீதிகளை தொடர்ந்தும் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) குறிப்பாக, தச்சங்குளம் – மூன்றுமுறிப்பு பிரதான வீதி நீண்டகாலமாக பொது மக்களின் பாவனைக்கு தடை செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இதனால், தச்சங்குளம் கிராமத்தில் வசிக்கின்ற மக்கள் தமது தேவைகளுக்காக இரண்டு கிலோ மீற்றர் பயணித்து கிராம அலுவலரின் அலுவலகத்திற்கு செல்வதற்கு பதிலாக சுற்றுப்பாதையில் 12 கிலோ மீற்றர் வரையில் செல்ல வேண்டியுள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்குறிப்பிட்ட தச்சங்குளம் – மூன்றுமுறிப்பு பிரதான வீதியை பொது மக்களின் பாவனைக்காக திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1115/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளின் அளவு யாது;

(ii) மேற்படி காணிகள், இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சாட்டுதல் செய்யப்பட்ட திகதி யாது;

(iii) அது சம்பந்தமான சட்டரீதியான ஏற்பாடுகள் யாவை;

(iv) மேற்படி காணிகளை பயன்படுத்தக்கூடிய நோக்கங்கள் யாவை;

(v) கடந்த காலத்தில் மேற்படி நோக்கங்களுக்குப் புறம்பான வேறேதேனும் நோக்கங்களுக்காக அக்காணிகள் கையுதிர்க்கப்பட்டனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1181/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் புகையிரத திணைக்களத்திற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து பாரிய பொருளாதாரப் பங்களிப்பு கிடைப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை, இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் மொத்த வருமானமும் வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணம் ஒவ்வொன்றினது வருமானமும், ஒவ்வோர் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) வடக்கு மாகாண புகையிரத நிலையங்களில், சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலமாகப் பணியாற்றும் புகையிரத நிலைய அதிபர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மொத்தப் புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கை, பிரதான புகையிரத நிலையங்கள் மற்றும் உப புகையிரத நிலையங்களின்படி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை வரையும் மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையும் உள்ள பிரதான புகையிரத நிலையங்கள் மற்றும் உப புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) முதல் வகுப்பு உறங்கும் பெட்டி வசதிகளைக் கொண்ட பயண முடிவிடங்கள் யாவை என்பதையும்;

(v) யாழ்ப்பாண புகையிரதங்களுக்கு இதுவரை, முதல் வகுப்பு உறங்கும் பெட்டி வசதிகள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1220/2025

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹொரோவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையத்தில் இன்றளவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காட்டு யானைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி நிலையத்திற்குச் சொந்தமான நிலப்பரப்பு எத்தனை ஏக்கர் என்பதையும்;

(iii) அந்த வளாகத்தில் இருந்த பயிர்ச் செய்கை நிலங்களின் அளவு எத்தனை ஏக்கர் என்பதையும்;

(iv) அந்தக் காணிகளுக்குப் பதிலாக உரிமையாளர்களுக்கு மாற்று பயிர்ச் செய்கை நிலங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மத்திய நிலையம் யானைகளின் வழித்தடமொன்றில் அமைத்துள்ளதால், அதனூடாக பயணிக்கும் காட்டு யானைகளுக்கு மாற்று வழிகள் இன்றி, அவை வேறு பயிர்ச் செய்கை நிலங்களூடாகச் செல்வதனால் பயிர் சேதங்கள் ஏற்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்காக வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதையும்;

(iii) காட்டு யானைகளால் ஏற்படும் பயிர் சேதங்களுக்காக இழப்பீடு வழங்க எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

(iv) தமது காணிகளுக்கான உறுதிகள் அல்லது அனுமதிப்பத்திரம் இல்லாத விவசாயிகளுக்கு பயிர்சேதங்களுக்கான இழப்பீடு செலுத்தப்படாதா என்பதையும்;

(v) ஆமெனில், அவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் விதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1236/2025

கௌரவ கே. காதர் மஸ்தான்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச சபைப் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் தொடக்கம் சிலாவத்துறை வரையான உள்ளக வீதி, 2010 ஆம் ஆண்டில் அப்போதைய மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சினால் புனரமைக்கப்பட்டமையை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வீதியின் தூரம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வீதி எந்தக் கிராமத்தினூடாகப் பயணிக்கின்றதென்பதையும்;

(iv) மேற்படி வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் நிறைவு செய்யப்பட்ட திகதி வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை புனரமைக்கும் பணிகளுக்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட கம்பனியுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரதியொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) உடன்படிக்கை எட்டப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த கம்பனியின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி வீதியை புனரமைப்பதற்காக கம்பனிக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வீதி புனரமைக்கப்படவில்லை என்பதையும் அதற்காக மோசடியான முறையில் பணம் பெறப்பட்டுள்ளதையும் அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1253/2025

கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதும் நுவரெலியா மாவட்டத்தில் காணப்படுகின்றதுமான காணிகளின் அளவு எத்தனை ஹெக்டயர் என்பதையும்;

(ii) அத்தகைய காணிகளுக்கென தற்போது பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள மாற்றுக் காணிகளின் அளவு எத்தனை ஹெக்டயர் என்பதையும்;

(iii) அவ்வாறு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரின் பெயர், வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு, காணி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படை மற்றும் வழங்கப்பட்ட காலப் பகுதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அவ்வாறு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் பட்டியலில் அரசியல்வாதிகளின் பெயர்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அந்த அரசியல்வாதிகள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1254/2025

கௌரவ ஈ.எம். பஸ்நாயக,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணிச் சீர்திருத்த ஆணைக்குழு உருவாக்கப்பட்டபோது, அந்த ஆணைக்குழுவிற்கு கண்டி மாவட்டத்திலிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவு ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் சட்டரீதியாக குத்தகை அடிப்படையில் காணிகள் வழங்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளின் அளவு என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து உரிய முறையில் வரி அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டவாறு குறித்த காணிகளில் சட்டரீதியற்ற வகையில் காணியை உபயோகப்படுத்துகின்ற நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) இந்நபர்களுக்கு/நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பின், அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1344/2025

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு – நம்புக்கன பிரதான புகையிரத வீதியின் என்டேரமுல்ல உப புகையிரத நிலையத்தில், புகையிரத மேடை மற்றும் கட்டிட பழுதுபார்ப்புக் கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அறிவாரா;

(ii) அதற்கென செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக சரியான பெறுகை வழிமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இந்தப் பணியுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் யாரென்பதையும்;

(v) இதற்கான தொழில்நுட்ப உதவி மற்றும் மேற்பார்வை செய்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(vi) இன்றளவில் ஆபத்தை விளைவிக்கும் நிலையிலுள்ள மூன்றாம் மேடையை அபிவிருத்தி செய்தல் மற்றும் சேதமான நிலையில் காணப்படுகின்ற பிரதான கட்டிட பழுதுபார்ப்பு பணி மேற்படி கருத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(vii) மேற்படி கருத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறி உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1361/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களுக்கு ஆயுர்வேதம், சித்த மற்றும் யுனானி மருத்துவக் கல்வியைக் கற்பதற்காக இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஆயுர்வேதம், சித்த மற்றும் யுனானி மருத்துவக் கல்வியைக் கற்று, உள்ளகப் பயிற்சியையும் நிறைவு செய்து, தற்பொழுது தொழிலை எதிர்பார்த்துள்ள வைத்தியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவமனைகளில் ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி மருத்துவர்ளுக்கான அனுமதிக்கப்பட்ட பணியாட்டொகுதியினர், தற்பொழுது சேவையாற்றும் பணியாட்டொகுதியினர் மற்றும் தற்பொழுது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) செயற்றிறன்மிக்க சுதேச மருத்துவ சேவையினைப் பெற்றுக் கொடுப்பதற்காக தற்பொழுது தொழில்வாய்ப்பற்ற சுதேச மருத்துவப் பட்டதாரிகளுக்கு அரசாங்க ஆயுர்வேத வைத்தியசாலைகளில் நியமனங்களை வழங்குவதில் உள்ள தடைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1427/2025

கௌரவ திலின சமரகோன்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பயணிகள் போக்குவரத்து பேருந்துகளுக்காக பெறப்படும் காப்புறுதித் திட்டம் யாதென்பதையும்;

(ii) பயணிகள் போக்குவரத்து பேருந்துகளுக்கு மூன்றாம் தரப்புக் காப்புறுதித் திட்டம் போதுமானதா என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் மேற்படி காப்புறுதித் திட்டத்துக்கு பதிலாக பிறிதொரு காப்புறுதித் திட்டமொன்று பெறப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களில் இன்றளவில் போதுமானளவு தொழில்நுட்ப அலுவலர்கள் சேவையாற்றுகின்றார்களா என்பதையும்;

(ii) மேற்படி டிப்போக்களின் தொழில்நுட்பப் பிரிவுகளுக்கு பயிற்சி பெற்ற தொழில்நுட்ப அலுவலர்கள் உள்ளனரா என்பதையும்;

(iii) உரிய பயிற்சியை தொடர்ந்து மேற்படி டிப்போக்களுக்கு தொழில்நுட்ப அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முறையானதொரு வேலைத்திட்டம் காணப்படுகின்றதா என்பதையும்;

(iv) தொழில்நுட்பக் கல்வியை வழங்கும் நிறுவனங்களின் மூலம் செயல்முறை பயிற்சிகளுக்காக இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற பயிலுநர்களை, பயிற்சிக் காலத்தின் பின்னர் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான வேலைத்திட்டமேதும் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஒக்தோபர் 24, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

19/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘லக்ஹன்ட’ வானொலி சேவை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) இச்சேவை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை;

(iii) 2018 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இந்த சேவையின் வருமானம்/ செலவு மற்றும் இலாபம்/நட்டம் ஆகியன ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது ;

(iv) மேற்படி காலப்பகுதியில் இந்த வானொலி சேவையின் சந்தை தரவரிசைப்படுத்தல் (rating) ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது;

(v) குறித்த காலப்பகுதியில் மேற்படி வானொலி சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பதவிப் பெயர்கள் ஆகியவை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வானொலி சேவையானது தற்போது சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கு பாரிய சுமையாக அமைந்துள்ளமையை அறிவாரா;

(ii) ஆமெனில், இது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1288/2025

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி. சூரியபண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சரளை அகழ்வு தொடர்பாக இலங்கையில் வலுவிலுள்ள சட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி சட்டங்களுக்கமைவாகச் சரளை அகழ்வு நடவடிக்கைளுக்கு விதப்புரைகளை வழங்க வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(iii) அதற்கு அங்கீகாரம் வழங்க வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(iv) யாதேனுமொரு இடத்தில் சரளை அகழ்வு நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி இடத்தை மேற்பார்வை செய்வதற்கான பொறுப்பு யாருக்கு அளிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(v) சரளை அகழ்வு தொடர்பாக இலங்கையில் வலுவிலுள்ள தற்போதைய சட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு அல்லது திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1309/2025

கௌரவ சந்தன சூரியஆரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண சபை பாடசாலைகளுக்கு சேவை இணைப்புச் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை இணைப்புச் செய்யப்பட்ட ஆண்டுகள் மற்றும் அவ்வொவ்வொரு ஆண்டிலும் சேவை இணைப்புச் செய்யப்பட்ட எண்ணிக்கை ஆகிய விபரங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) அரச ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும்போது மேற்படி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஏதேனும் சலுகைகளை வழங்க முடியுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சலுகைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செய்யும் பொருட்டு நடத்தப்படவிருந்த போட்டிப் பரீட்சைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகள் / கட்டளைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1322/2025

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாற்றுத்திறனுடைய மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பல்கலைக்கழக வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி மாணவர்களின் மாற்றுத்திறன்கள் எவ்வகையானவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மாற்றுத்திறனுடைய மாணவர்களின் எண்ணிக்கை மாற்றுத்திறன் வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரச பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறனுடைய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடைமுறை யாதென்பதையும்;

(ii) மேற்படி நடைமுறையை இற்றைப்படுத்தவும் முறைப்படுத்தவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அரச பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறனுடைய மாணவர்களை இணைத்துக் கொள்வதில் இட ஒதுக்கீட்டு முறைமையொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கான உள்ளடக்கக் கல்வி முறையியல் ஒன்று செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது செயற்படுத்தப்படும் முறை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மாற்றுத்திறனுடைய பல்கலைக்கழக மாணவர்களுக்கு தாங்கள் விரும்பும் எந்தவொரு பாடப்பிரிவிலும் கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி மாணவர்கள் தற்போது கல்வி கற்கும் பாடப்பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) மாற்றுத்திறனுடைய மாணவர்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் கல்வி கற்க முன்வராமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1346/2025

கௌரவ உபுல் கித்சிறி,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) சர்வதேச தரத்தில் காணப்படாத போதிலும் கடினப்பந்து (லெதர்) கிரிக்கெட் விளையாடக்கூடிய ஆடுகளங்களைக் கொண்ட மைதானங்களின் மொத்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) பாடசாலைகளுக்குச் சொந்தமான கடினப்பந்து கிரிக்கெட் விளையாடக்கூடிய ஆடுகளங்களைக் கொண்ட விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) பாடசாலை கிரிக்கெட் துறையை மேம்படுத்துவதற்கு அனுசரணை வழங்கக்கூடிய இயலுமை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1351/2025

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெரும் உந்துசக்தியாக அமையும் பனைமரத்தை இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மூலவளமாக ஏற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கவனயீனம், நகரமயமாக்கல் மற்றும் காடழிப்பு போன்ற காரணங்களால் பனைமரங்கள் அழிவடைவதனைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) வட மாகாணத்தில் பனை செய்கையை விரிவாக்குவதற்கான சிறப்புக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஏனைய மாகாணங்களிலும் பனை செய்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) பனை செய்கையை விரிவாக்குவதற்கு மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் சமுதாயமட்ட அமைப்புகளும் இணைத்துக் கொள்ளப்படுமா என்பதையும்;

(vi) பனை செய்கைக்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(vii) பனை தொடர்பிலான அபிவிருத்தி ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுமா என்பதையும்;

அவர் அறியத்தருவாரா?

(ஆ) (i) பனை சார்ந்த சிறு கைத்தொழில்கள், கிராமிய நிறுவனங்கள் மற்றும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை வலுவூட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) பனை சார்ந்த உற்பத்திகளை சர்வதேச சந்தையில் விற்பனை செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அதனூடாக இலங்கையின் அந்நியச் செலாவணி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் அறியத்தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1353/2025

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தூரப் பயணச் சேவைகளில் ஈடுபடும் பேருந்துப் பயணிகளுக்கு உணவு, பானங்கள் மற்றும் உடல்நலவியல் வசதிகளை வழங்கும் உணவகங்கள்/ ஹோட்டல்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி உணவகங்கள்/ஹோட்டல்கள் பதிவு செய்யப்பட்டிருக்க அல்லது அனுமதி பெற்றிருக்க வேண்டுமா என்பதையும்;

(iii) ஆமெனில், பதிவு செய்யப்பட்ட/அனுமதி பெற்ற உணவகங்கள்/ ஹோட்டல்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) பதிவு செய்யப்பட்ட உணவகங்கள்/ஹோட்டல்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் அல்லது நிபந்தனைகள் ஏதேனும் உள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(vi) மேற்படி உணவகங்களை/ஹோட்டல்களை பதிவு செய்கையில் கட்டணம்/வரி அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(vii) ஆமெனில், அக்கட்டணம்/வரித்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1358/2025

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாற்றுத்திறனாளிகளுக்கு தொழிற் கல்வியை வழங்குவதற்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நிலையங்களில் தற்போது பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி நிலையங்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நடைமுறை யாது;

(iv) மேற்படி நிலையத்துக்கு வருடாந்தம் இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாது;

(v) தொழில் பயிற்சியை பெற்றுக்கொள்வதற்காக மேற்படி நிலையங்களுக்கு வருடாந்தம் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை யாது;

(vi) மேற்படி விண்ணப்பப்படிவங்களுக்கமைய இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களைத் தவிர எஞ்சிய மாணவர்கள் தொடர்பில் பின்பற்றப்படும் நடைமுறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிலையங்களில் போதியளவு பயிற்சியாளர்கள் பணிபுரிகின்றார்களா;

(ii) இன்றேல், புதிய பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) மேற்படி நிலையங்களைப் பேணி வருவதற்கு வருடாந்தம் செலவிடப்படும் பணத்தொகை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1359/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின், பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில், இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் டிப்போ ஒன்று உள்ளதென்பதையும்;

(ii) மேற்படி பஸ் டிப்போ சுற்றுலா கைத்தொழிலுக்கு பிரபல்யமான அறுகம்பை பிரதேசத்தில் அமைந்துள்ளது என்பதையும்;

(iii) தற்பொழுது மேற்படி பஸ் டிப்போவினால் 10 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பஸ் டிப்போவினால் அறுகம்பை தொடக்கம் கட்டுநாயக்க மற்றும் எல்ல போன்ற பயண முடிவிடங்களுக்கு புதிய பேருந்துச் சேவைகள் ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி பஸ் டிப்போவிற்கு எரிபொருள் நிரப்பு நிலையம், பராமரிப்புப் பிரிவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி பஸ் டிப்போவிற்கு புதிய பேருந்துகள் வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1405/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை, திருகோணமலை பொது மருத்துவமனை, மூதூர், கிண்ணியா மற்றும் கந்தளாய் ஆதார மருத்துவமனைகள் ஆகியவற்றில் மாதாந்தம் நிகழ்ந்த மகப்பேறுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) அத்தகைய மகப்பேறுகளுக்கு ஒப்பீட்டளவில் அந்தந்த மருத்துவமனைகளில் பணியாற்ற வேண்டிய மருத்துவர்களின் எண்ணிக்கை, பிற பணியாட்டொகுதி அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் பிற வசதிகள் குறித்து மீளாய்வு செய்து மேற்படி மருத்துமனைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(iii) திருகோணமலை மருத்துவமனையிலிருந்து மட்டக்களப்பு, அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவையிலுள்ள பிரதான மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைக்கப் படுகின்ற நோயாளர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை அறிவாரா;

(iv) இந்நிலைமைக்குத் தீர்வாக திருகோணமலை பொது மருத்துவமனையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா;

(v) மேற்படி மருத்துவமனைகளில், மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபையால் நிருவகிக்கப்படுகின்ற மருத்துவமனைகள் வெவ்வேறாக யாவை;

(vi) 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் இதுவரை, மேற்படி மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் சிகிச்சை பெற்ற வதிவிட மற்றும் வெளி நோயாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 நவம்பர் 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

117/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றளவில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iii) ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளாத உறுப்பினர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

206/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் கமத்தொழில் துறையின் தொழில்நிலை வீதம், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் கமத்தொழில் துறையின் தொழில்நிலை வீழ்ச்சியடைந்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இளைய சமூகத்தினரை கமத்தொழில் துறையின்பால் ஈர்க்கும் பொருட்டு வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

219/2024

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கையில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட வயல்களின் அளவு ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஏற்ப வெவ்வேறாக எத்தனை ஏக்கர் என்பதையும்;

(ii) அதன் காரணமாக நெல் விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி யாது என்பதையும்;

(iii) பாதிக்கப்பட்ட வயல்களில் மீள்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களின் அளவு எத்தனை ஏக்கர் என்பதையும்;

(iv) பாதிக்கப்பட்ட வயல்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது குறித்த விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

229/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினாலும் சட்டத்துறை தலைமை அதிபதியினாலும் மீளப் பெறப்பட்ட வழக்குகளை மீண்டும் மீளாய்வு செய்து அதற்கமைவாக தகுந்த வழக்குகளை மீள தாக்கல் செய்வதற்கு ‘வளமான நாடு - அழகான வாழ்க்கை’ கொள்கைப் பிரகடனத்தின் மூலம் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) 2019 தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் மீளப் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி வழக்குகளில் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர், மீள தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) 2019 தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை, நிதி ஊழல்கள் தொடர்பாக சட்டத்துறை தலைமை அதிபதியினால் மேல்நீதிமன்றம் மற்றும் நீதிவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் மீளப்பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அந்த வழக்குகளில் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு சட்டத்துறை தலைமை அதிபதியினால் மீள தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

263/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத் தகவல் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அத்திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் அத்திணைக்களத்தில் கடமையாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படித் திணைக்களத்தின் தற்போதைய பணிப்பொறுப்பு யாது என்பதையும்;

(v) மேற்படித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயர் என்ன என்பதையும்;

(vi) அவருடைய கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

313/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் 2015 முதல் இற்றைவரை இயங்கிவரும் தனியார் மின்சார உற்பத்திக் கம்பனிகளின் எண்ணிக்கையினை ஒவ்வொரு வருடத்திற்குமென வெவ்வேறாகவும்;

(ii) அவ் ஒவ்வொரு கம்பனியினதும் பெயர் மற்றும் முகவரியை அதனால் உற்பத்தி செய்யப்படும் கொள்ளளவுடன் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கம்பனியும் 2015 முதல் இற்றைவரை இலங்கை மின்சார சபைக்கு வழங்கிய மின்சார அலகுகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு கம்பனிக்கும் செலுத்தப்பட்ட தொகை என்பவற்றை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மின்சார உற்பத்திக் கொள்ளளவை அதிகரிப்பதற்காக இலங்கை மின்சார சபையினால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) இந்த மின்சார உற்பத்தி முறைமைகள் புதுப்பிக்கத்தக்கனவா அல்லது அனல் மின்சாரத்திற்குரியனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

340/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பெரிய போரதீவு மற்றும் பழுகாமம் ஆகிய பிரதேசங்களை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள பாலம் புனரமைக்கப்பட வேண்டுமென்பதையும்;

(ii) குறித்த பாலத்தின் ஊடான போக்குவரத்து வசதிகளை மேற்கொள்வது பொது மக்களுக்கு பெரும் நெருக்கடியாக உள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி பாலத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

622/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள அனர்த்தங்களின் எண்ணிக்கை, அந்தச் சம்பவங்களால் அனர்த்தங்களுள்ளான ஆட்களின் எண்ணிக்கை மற்றும் குறித்த ஆட்களுக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அனர்த்த முகாமைத்துவத்திற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) உலகில் பெரும்பாலான நாடுகள் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதை அறிவாரா என்பதையும்;

(iv) அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் இலங்கை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) இன்றேல், ஏன்?

726/2025

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்நாட்டிற்கு ஒரு வருடத்திற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற உருளைக்கிழங்கின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) இறக்குமதி செய்யப்படுகின்ற உருளைக்கிழங்கிற்கு அறவிடப்படுகின்ற வரி எவ்வளவு என்பதையும்;

(iii) இந்நாட்களில் நுவரெலியா, வெலிமடை, ஊவ பரணகம மற்றும் ஹப்புதலை ஆகிய பிரதேசங்களில் உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்படுகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) எனவே இலங்கையில் உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்படுகின்ற காலப்பகுதியில் இலங்கைக்கான உருளைக்கிழங்கு இறக்குமதியை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1430/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெலிமடை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அலங்காலகால கிராம அலுவலர் பிரிவின், ஹரக்கமகந்த கிராமத்தில் சுமார் ஐந்து ஏக்கர் பரப்பளவைக் கொண்ட அரச காணி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) அந்தக் காணி கூட்டுத்தாபனத்திற்கு முறைப்படி கையுதிர்ப்புச் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கூட்டுத்தாபனத்தினால் மேற்படிக் காணி மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அது சட்டரீதியானதா என்பதையும்;

(v) அந்த மூன்றாம் தரப்பினர் யாவர் என்பதையும்;

(vi) சம்பந்தப்பட்ட மூன்றாம் தரப்பினரால் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரி நிலுவைத்தொகை செலுத்த வேண்டியிருக்கும்போது, மேற்படி காணியை ஒரு தனியார் வங்கியில் அடகு வைத்து கடன் தொகையொன்றைப் பெற ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது சட்டவிரோதமற்றதா என்பதையும்;

(iii) மேற்படி காணியை சாட்டுதல் செய்கையில் மற்றும் வரி நிலுவைத் தொகை செலுத்தப்பட வேண்டியுள்ள நிலையில் கடன் தொகையொன்றைப் பெற நடவடிக்கை எடுத்திருப்பதன் மூலம் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் சட்டத்தை மீறியுள்ளதா என்பதையும்;

(iv) அந்தக் காணியை அரசாங்கத்திற்கு மீளக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 நவம்பர் 06, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

679/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தில், நிலக்கரி எரியூட்டப்பட்ட பின்னர் சேரும் சாம்பல் விற்பனை மூலம் 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஈட்டப்பட்டுள்ள வருமானம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி சாம்பல் விற்பனையின்போது பின்பற்றப்பட்டுள்ள வழிமுறை யாதென்பதையும்

(iii) அவ்வாறு ஈட்டியுள்ள வருமானத்திலிருந்து இந்த மின் உற்பத்தி நிலையத்தின் சுற்றயலில் வசிக்கின்ற அத்துடன் சூழல்சார் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மக்களின் நலனோம்புகைக்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

811/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள, மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் உரித்தான பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை;

(iii) இன்றளவில் அந்த பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் கல்விசாரா பணியாளர்களின் வெற்றிடங்கள் ஒவ்வொரு கல்வி வலயத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iv) கொழும்பு மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

818/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் இலங்கை அதிபர் சேவையில் உள்ள அதிகாரிகளுள் தற்போது சம்பள ஏற்றம் இடைநிறுத்தப்பட்டுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு சேவையின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அதிகாரியினதும் பெயர், சம்பள ஏற்றம் இடைநிறுத்தப்பட்டுள்ள திகதி மற்றும் அதற்கான காரணங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி அதிகாரிகளின் சம்பள ஏற்றங்களை மீள வழங்குதல் மிகவும் மந்தகதியில் இடம்பெற்றுவருவதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி அதிகாரிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளை விரைவுபடுத்தி, சம்பள ஏற்றங்களை வழங்கி, அவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

826/2025

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் 2019 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் இதுவரையில் அடைந்துள்ள முழுமையான நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) அதில் தொழிற்பாட்டு நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தால் விமானங்களுக்காகச் செலுத்தப்படும் வருடாந்தக் குத்தகைத் தவணை/கடன் தவணைக் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி குத்தகைத் தவணை/கடன் தவணைக் கொடுப்பனவு செலுத்தப்படும் விமானங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கடனுக்காக வருடாந்தம் செலுத்த வேண்டிய மொத்த கடன் தவணைத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படிக் கடன் தவணையில் உள்ள மூலதனத் தொகை மற்றும் வட்டித் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

851/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்லேகலே, தும்பர சிறைச்சாலையில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி சிறைச்சாலையில் தடுத்து வைக்கக்கூடிய சிறைக்கைதிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி சிறைச்சாலையின் புதிய நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதன் மூலம் தற்போது சிறைச்சாலைகளில் காணப்படும் நெருக்கடியைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

881/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 'அளிப்புப் பத்திரம்' (Deed of Grant) அல்லது 'காணி உரிமம்' (Land Permit) இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் ஆட்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(v) குறிப்பிட்ட பிரதேச செயலாளரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் 2017.01.01 முதல் 2025.03.31 வரையான காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) குறிப்பிட்ட சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1062/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு மீண்டும் வாகனம் இறக்குமதி செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் இற்றைவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வாகனங்களிலிருந்து அறவிட்டுக் கொள்ள வேண்டிய வரித் தொகை என்ஜின் கொள்ளளவுக்கு அமைய வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி வாகனங்களை இறக்குமதி செய்வதன் மூலம் ஈட்டிக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வரித் தொகை மற்றும் அவற்றிலிருந்து இதுவரை ஈட்டிக்கொள்ளப்பட்ட வரித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு மீண்டும் வாகனம் இறக்குமதி செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் இற்றைவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை மற்றும் மோட்டார் சைக்கில்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட ஒரு முச்சக்கர வண்டிக்கும் அறவிடப்படுகின்ற வரித் தொகை எவ்வளவு;

(iii) இறக்குமதி செய்யப்படுகின்ற ஒரு மோட்டார் சைக்கிலுக்கு அறவிடப்படுகின்ற வரித்தொகை என்ஜின் கொள்ளளவுக்கு அமைய வெவ்வேறாக எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1243/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 – 2025 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள காணிகளை நிரப்புவதற்காக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள மொத்த வயற் காணிகளின் அளவு, அத்தகைய ஒவ்வொரு வயற் காணியின் உரிமையாளரின் பெயர், அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள வயற் காணியின் பரப்பளவு மற்றும் அங்கீகாரம் அளித்தமைக்கான காரணம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதற்கமைவாக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் வழங்கப்பட்டுள்ள கடிதங்களின் பிரதிகளைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1278/2025

கௌரவ அஜித் கிஹான்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளில் முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு காணியும் வழங்கப்பட்டுள்ள முதலீட்டுக் கருத்திட்டம், காணியின் அளவு மற்றும் அமைந்துள்ள பிரதேசச் செயலகம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி காணிகளுக்கு செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை உரியவாறு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், குத்தகைத் தொகை செலுத்துவது தவிர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மேற்படி காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) அவற்றில் குறை அபிவிருத்தியுடைய காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட மேற்படி காணிகள் உரியவாறு அபிவிருத்தி செய்யப்படாதவிடத்து அல்லது குத்தகை செலுத்துதல் தவிர்க்கப்பட்டுள்ள பட்சத்தில் அவை மீள சுவீகரிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்படி ஆணைக்குழுவிற்குச் சொந்தமான மொத்தக் காணியின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அக்காணிகள் வீடுகளை நிர்மாணிப்பதற்கு வழங்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1327/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள A, B, C மற்றும் D தரங்களைச் சார்ந்த வீதிகளின் நீளம், ஒவ்வொரு தரம் வாரியாக வெவ்வேறாக கிலோமீற்றர்களில் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தரத்தைச் சார்ந்த வீதிகளையும் பராமரிக்கும் நிறுவனங்கள், வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வீதிகளை அபிவிருத்திச் செய்வதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்கள் மூலம் அபிவிருத்திச் செய்யப்பட்ட வீதிகளின் நீளம் கிலோமீற்றர்களில் யாதென்பதையும்;

(iii) அக்கருத்திட்டங்கள் மூலம் குருநாகல் மாவட்டத்தில், வீதிகள் நிர்மாணிக்கப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வீதிகளின் நீளம் கிலோமீற்றர்களில் யாதென்பதையும்;

(v) அதற்காகச் செலவிடப்பட்ட மொத்த நிதி எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---